ஸ்ரீ ஆபதுத்தாரணர் துணை

# 14 ஸ்ரீ ஆபதுத்தாரணர் மாலை

## காப்பு

விண்ணூர் மலர்ப்பொழில் சூழ்காழி மாமலை மேலமர்ந்த
தண்ணூர் மதிபுனை வேணிய னாபதுத் தாரணன்மேல்
பண்ணூறப் பாடிய மாலைக்கு மாமுகன் பாதமும்நீள்
கண்ணூ றிரண்டுள கந்தன்பொற் பாதமுங் காத்திடுமே.

## நூல்

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யுஞ்செம் முகமலருங்
கார்கொண்ட சட்டையுந் தண்டா யுதமுங் கனங்க
ளேட்டுங்
கூர்கொண்ட மூவிலைச் சூலமுங் கொண்டருள் கூர்ந்த
கொன்றைத்
தார்கொண்ட வேணியனே காழி யாபதுத் தாரணனே 1

தெள்ளும் புழுகும் பனிநீருங் குங்குமச் சேறுஞ்செந்தேன்
விள்ளும் மலரும்நின் பாதத்திற் சாத்தி விடாமலின்பங்
கொள்ளும் படியன்பு தந்தெனை யாண்டருள் கூற்றுவ
தள்ளும் பதாம்புயனே காழி யாபதுத் தாரணனே. [னைத்

சாயாத சூலதண் டாயுத னேபச்சைச் சட்டையனே
வேயார்விண் ணோர்தொழு மேனிய னேயென் மிடி
தவிர்ப்பாய்
வாயார வுன்னைத்துதிப்போர்க்கு வேண்டும் வரமளிப்பாய்
தாயா கியஅப்ப னேகாழி யாபதுத் தாரணனே. 3

வட்டையோப் பாகு மினியசோல் மாதர் மயக்கத்திலே
பட்டையப் பாமிக யானினைத் தேன் பண்டிருவர்க்கேட்டா
ரெட்டையப் பாமறை காணுத சேவடி நீயருள்வாய்
சட்டையப்பா வடுகா காழி யாபதுத் தாரணனே. 4

மட்டுப் படாத யமதூதர் வந்து வளைத்துடலைச்
சுட்டுப் பலபோடி யாக்குமுன் காத்தருள் தோடணிந்த
பட்டுப் புயத்தினுந் தண்டா யுதத்தினும் பாதத்தினுந்
தட்டுப் புழுகணி யுங்காழி யாபத்துத் தாரணனே. 5

ரேறியும் போறியுந் தவமும்மெய்ஞ் ஞானமும் நீடறிவும்
போறியும் புகழும்கோடுத்தருள் வாய்புரம் காய்ந்தவனே
குறியும் குணமும் கடந்தவ னேகுழக் கன்றுகட்டுந்
தறியின்கண் வந்தவனே காழி யாபதுத் தாரணனே. 6

அடியார் மனத்தி னினைத்த கரும மனைத்துமங்கே
முடியாத தேது முடித்தருள் வாய்முரு காரலங்கல்
கடியார் மலர்க்கோன்றை மாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந்திய கையனே காழி யாபதுத் தாரணனே. 7

முட்டற வாழும் பெருஞ்சேல்வ மும்முத் தமிழ்க்கல்வியும்
எட்டுணை யேனுங் கோடுத்துண் டிருக்க எனக்கருள்வாய்
வட்ட மதிச்சடை யானே சிகர மலைக்கமர்ந்த
சட்டம் உடையவனே காழி யாபதுத் தாரணனே. 8

போய்யா கியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தழுந்தி
மெய்யாம் இதுஎன நம்பிவிட்டேன்வினை யேனைக்கண்பார்
மையாடு கண்ணியர் பின்சேலத் தாரு வனத்திற்சென்ற
சைவா கமப்போருளே காழி யாபதுத் தாரணனே. 9

நீலக் கயல்விழி மாஞர் கலவியின் நேசம்வைத்தே
ஆலைக் கரும்பது போலாய் விடாதுன் னருள்புரிவாய்
வாலைக் கலைமதி வேணியனே வடுகா அடியார்
சாலத் தொழும்ஐய னேகாழி யாபதுத் தாரணனே. 10

செந்தமி ழோர்தொழும் தண்டா யுதமும் திருவழகும்
கந்தர மும்பச்சைக் கஞ்சுகம் தானும் கருதரிய
இந்தணி வட்டச் சடையும் கண் மூன்றும் இருபதமும்
சந்ததமும் மறவேன் காழி யாபதுத் தாரணனே. 11

படிக்கும்தண் டாயுத மென்பார்க்கு நோய்வினை
பற்றறுப்பப்
பிடிக்கும்தண் டாயுத மெண்ணருங் கோடிப்ர மாண்ட
மெல்லாம்
முடிக்கும்தண் டாயுத மூதண்டந் தாண்டு முகுந்தன்
சென்னி
தடிக்கும்தண்டாயுதனே காழி யாபதுத் தாரணனே. 12

அரம்பிடிக் கும்கண்ணணி ஞராசை மேற்கொண்
டலைவதெல்லாம்
வரம்பிடிக் கும்கருத் துண்மைகண் டார்க்கில்லை
வந்தருள்கூர்
உரம்பிடிக் கும்துட்ட வேதாள பூதத்தை யோட்டி
வெட்டித்
தரம்பிடிக் கும்வடுகா காழி யாபதுத் தாரணனே. 13

பெருகா ரணியத்தில் யான்சென்ற போதும் பெரும்
பொருளால்
வருகாதல்கொண்டிரவில்துயில்போதுமிம்மண்டலத்தில்

துருவா தியர்கள் சபையில்சேல் போதும் துணையெனக்கு
வருவா யுனைநம்பி னேன்காழி யாபதுத் தாரணனே. 14

செம்மலை மீதினில் சாமள கஞ்சுகம் சேர்வடிவும்
அம்மலை போலும்நற் றண்டா யுதமும்கோண்
டன்புடனே
எம்மலை வேதம் தவிர்த்தருள் வாய் கடுவேந்திவிண்ணோர்
தம்மலை வோட்டும் தமிழ்க்காழி யாபதுத் தாரணனே. 15

மாடும்தண் டாமம்அணிந்திடும் மைந்தரும் மாதர்களும்
வீடும்தண் டாமம்எனமகி ழாமல்உன் மேன்மலர்த்தாள்
பாடும்தண் டாத்தமிழ் ஈந்தருள் பூத பிசாசுகளைச்
சாடும்தண் டாயுதனே காழி யாபதுத் தாரணனே. 16

வேடிக்கும் பரவை முரசதிர் காமனை வீறழியப்
போடிக்கும் கனல்விழிப் புண்ணிய னேபுவி யோர்கள்
நேஞ்சம்
துடிக்கும் போல்லாத பிசாசுகள் தம்மைத் துரத்திவேட்டி
அடிக்கும் தண்டாயுத னேகாழி யாபதுத் தாரணனே.17

இலையேன் றோருவர்க் கிதம்சோல்லி யேன்றும்இரங்கி
நில்லா
நிலையேன்று நீஅளித் தாண்டருள் வாய்நித்த னேபுகலி
மலையோன் றியவடு கேச கங்காள வயிரவனே
தலையோன் றியகைய னேகாழி யாபதுத் தாரணனே. 18

பாடிக்கோண் டாடிப் பணிந்திடும் அன்பர்தம் பாதமலர்
சூடிக்கோண் டாடித் திரிந்திட வேயெனைத் தோண்டு
கோள்வாய்

தேடிக்கோண் டாடி வருவோர்கள் வல்வினைச் சிக்கை
யேல்லாம்
சாடிக்கோண் டாடிய வாகாழி யாபதுத் தாரணனே. 19

தேவ்விடத் தாய திசைபிழைத் தாலும் சினஅரவம்
கவ்விடத் தான்வேய்ய கான்நடந் தாலும்கருதரிய
எவ்விடத் தேனும்இருந்தாலும் என்றன்இடரையேல்லாம்
தவ்விட நீவரு வாய்காழி யாபதுத் தாரணனே. 20

நீடும்தண் டாயுதம் நித்தம்தண் டாயுதம் நித்தம்அன்பர்
தேடும்தண் டாயுதம் ஈரே ழுலகமும் சேவித்துக்கோண்
டாடும்தண் டாயுதம் அண்டாது பேய்கள் அலறிவிழச்
சாடும்தண் டாயுத னேகாழி யாபதுத் தாரணனே. 21

வங்கம் கலிங்கம் குலுங்கம் தேலுங்கம் மராடம்முதல்
எங்கேங்கும் போக இடர்வரும் போதும் இனிமையுடன்
அங்கங்கு நீதுணை யாய்வரு வாய்அந்தி வான்மதியம்
தங்கும் சடாடவி யாய்காழி யாபதுத் தாரணனே. 22

ஈனம் தரும்இதேன் றேண்ணு மலேயிடும்பான் மேலிந்திங்
கூனம் தரும்இந்தச் சேல்வருக் கிச்சை யுரை
உரைத்தேன்
வானம் தரும்உம் பருக்காய் அவுணரை மாட்டிநல்ல
தானம் தரும்அண்ண லேகாழி யாபதுத் தாரணனே.

அடிக்குள் பணியும்நின் அன்பரைக் காயும் அவர்உடலை
வேடித்துப் போடிபட நீவிழிப்பாய் எட்டுவேற்பும் சேற்றே
இடித்துப் போடிபட வல்லா யுதம்பதி னேட்டும் உன்கைத்
தடிக்குப் பேரியதுண் டோகாழி யாபதுத் தாரணனே.

உளப்பரி வில்லவர் தம்மில்லில் சென்றங் குரை
உரைத்துக்
கோளப்பரி வான மொழிபல கூறிக் குறைகள் சொல்வீர்
இளைப்பறக் காப்பவன் யாவன்என் றல்அர விந்தம்
எல்லாம்
தளைப்பருஞ் செல்வி வளர்காழி யாபதுத் தாரணனே. 25

கலையாரும் முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையா கியபெருஞ் செல்வமும் நீதியும் நீயருள்வாய்
மலையாசன வடுகேச கங்காள வயிரவனே
தலைமாலை சூழ்புய னேகாழி யாபதுத் தாரணனே. 26

வாட்கொண்ட கண்ணியர் மாயையில் வீழ்ந்து
மருண்டுபல
நாட்கொண்ட தீயேனை யாட்கொண்டு காத்தருள்
நல்குவையோ
கோட்கொண்ட காலனுக் கஞ்சிய பாலனைக் கூர்ந்
தளித்துத்
தாட்கொண்டு காத்தவ னேகாழி யாபதுத் தாரணனே.

நிட்டைக்குள் வாழ்வும் நின்னடிபோற்றவும் நேர்ந்தறியா
வொட்டைச் சடலத்தை யான்எடுத் தேன்ஒளி ஓங்கு
செம்பொற்
பட்டைப் புனைந்த புயமீது மாயன் படிவம்தந்த
சட்டைக் கிடம்தந் தருள்காழி யாபதுத் தாரணனே. 28

சொல்லா கியபொருள் எல்லாம் உணர்ந்துனைத்
தோத்திரிக்க
வல்லார் தமைத்தொழ வல்லான் எனஎன்னை வைப்ப
துண்டோ
கல்லாற் சிலைதொட்டநல்லார் எல்லார்க்கும் கதியளிக்கும்
சல்லாபம் ஆனவ னேகாழி யாபதுத் தாரணனே. 29

இந்திரன் வாழ்க்கையும் நான்முகன் வாழ்க்கையும்
ஈர்ந்துளவோன்
நந்தமில்வாழ்க்கையும்பெற்றாலும்நின்னடியார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை ஒவ்வாது காண்ஒளி பூண்ட
சந்திர சேகரனே காழி யாபதுத் தாரணனே. [இளஞ்

ஸ்ரீ ஆபதுத்தாரணர்மாலை முற்றிற்று.